**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR QUARRYING PROPOSAL OVER AN EXTENT OF 1.90.50 HA -M/S.B.KABILDEV ROUGH STONE AND GRAVEL QUARRY, S.F.NO. 623/1C, 623/1D, 623/1G, 623/2A, 623/2B, 623/2C, 623/1A, 623/1B, 623/1E & 623/1F OF GOPALAPURAM VILLAGE, VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 09.12.2025, 11.00 AM AT M/S.PERIYATHAI KANDASAMY KALYANA MANDAPAM, 3/367-A, MANAVALAN THOTTAM, ALANGULAM VILLAGE, RAJAPALAYAM VIA, VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.S.K.Kanagaraj | : | Revenue Divisional Officer,<br>Sattur,<br>Virudhunagar District. |
| 2 | Er. J. Hamoneth Joesun | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| 3 | Tmt.N.Kalaivani | : | Tahsildar<br>Vembakottai |
| 4 | Er. V.Kalaijothi | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| | As per Attendance Register | : | Government Officials, Public and Project proponent 110 Nos (List enclosed). |

The public hearing was held on 09.12.2025 at 11.00AM at M/s.Periyathai Kandasamy Kalyana Mandapam, 3/367-A, Manavalan Thottam, Alangulam Village, Vembakottai Taluk, Virudhunagar District under EIA Notifications, 2006 for the Quarry proposal over an extent of 1.90.50 Ha - M/s.B.Kabildev Rough Stone and Gravel Quarry, S.F.No.623/1C, 623/1D, 623/1G, 623/2A, 623/2B, 623/2C, 623/1A, 623/1B, 623/1E & 623/1F of Gopalapuram Village, Vembakottai Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer, Sattur, other Government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices informing the conduct of Public Hearing was published in "Dinamalar" and "The New Indian Express" on 06.11.2025. He also informed that wide publicity was given about the conduct of public

hearing by circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written statements would also be received.

Further he stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu to Consider the issue of Environmental Clearance to the proposed project.

The Revenue Divisional Officer, Sattur initiated the Public Hearing process. Subsequently, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s.B.Kabildev Rough Stone and Gravel Quarry to the public along with Environmental Management Plan.

Further, the public has furnished their views with respect to the project as follows –

**1. Mr. Muthukumar, Gopalapuram Village:**

Mr. Muthukumar stated that quarries are already operating on the western and eastern sides of the proposed quarry site. Therefore, if another quarry is established at this same location, educated youngsters will get employment opportunities and owners who have tractors and lorries will benefit economically through the operations of such quarries. He also mentioned that materials like stones and gravel required for constructing houses will be available at a lower price. Further, he concluded his speech by stating that they have no objection to the establishment of this quarry.

**2. Mr. Vanaraj, Gopalapuram Village**

Mr.Vanaraj stated that the establishment of this quarry would be beneficial for their livelihood therefore, the quarry should be established.

**3. Mr. Jeevaraj, Muththanathi Village**

Mr.Jeevaraj stated that the establishment of this quarry would not cause any impact and the materials such as stone and soil would be available at a lower price. He concluded his speech with these remarks.

**4. Mr. Ayyanar, Vadakarai Village**

Mr.Ayyanar stated that they have no objection to the establishment of this quarry. He further mentioned that if the quarry is established will get employment opportunities and materials such as jelly, stone, and soil would be available at a lower price.

**5. Mr.M. Sundararaj, Gopalapuram Village**

Mr.M. Sundararaj stated that the establishment of this quarry will increase revenue for their village, and such revenue will help to establish necessary facilities to the village. Therefore, they have no objection to the establishment of this quarry.

**6. Mr. S. Rajkumar, Gopalapuram Village**

Mr.S. Rajkumar stated that his land is located at a distance of 50 metres from the proposed quarry site. He further mentioned that the village roads are damaged and that this public hearing should be conducted in Gopalapuram village. He also stated that officials should inspect Gopalapuram village whether all the existing quarries in the village are operating properly. He concluded his remarks with these points.

**7. Mr. M. Jayakumar, Gopalapuram Village**

Mr.M.Jayakumar stated that there is no issue in establishing this quarry. He further informed that from the Mineral Resource Fund for the period of 2021–2025, an amount of Rs. 5 crores was used to construct the Gopalapuram Panchayat Union office, and from the year of 2023–2024 Mineral Resource Fund, Rs.89 lakhs was used to construct two bridges and roads. He concluded his speech by stating that they have no objection to the establishment of this quarry.

**8. Mr.K. Bharathiraj, Sivalingapuram Village**

Mr.K.Bharathiraj stated that there is 4 km distance between the Sivalingapuram village and proposed quarry site. He further mentioned that only 10 % of people used Gopalapuram to Swaminathapuram road, while 90% of its usage is due to the operation of quarries. He concluded his speech by stating that they have no objection to the establishment of this quarry.

**9. Mr.R. Krishnamoorthy, Gopalapuram Village**

Mr.R. Krishnamoorthy stated that his house is located 500 metres from the quarry due to blasting activities in this quarry cause vibration in his house. He further stated that the road constructed at a cost of Rs. 85 lakhs is being used mainly for the quarry operations and not for public use. He added that the four quarries functioning in the village carry out blasting simultaneously, it cause noise pollution, heavy dust, and odour nuisance. He also mentioned that there is no prior intimation to cattle grazers and farmers regarding the timing of the blasting in quarries. He concluded his speech with these remarks.

**10. Mr. Senthilkumar, Gopalapuram Village**

Mr.Senthilkumar stated that this public hearing should have been conducted in Gopalapuram village and requested that in future, public hearings will be conduct in their village.

**11. Mr. Manikandan, Gopalapuram Village**

Mr.Manikandan stated that the establishment of this quarry would not cause any harm. He further mentioned that quarries have been functioning in their village for the past five years and they have not faced any issues because of these quarrying operations.

**12. Mr. Kannayiram, Gopalapuram Village**

Mr.Kannayiram stated that houses are located at a distance of 300 to 400 metres from the proposed quarry site. He further mentioned that continuous blasting in the quarry would cause damage to the houses. He concluded his speech with these remarks.

**13. Mr. Venugopal, Gopalapuram Village**

Mr. Venugopal stated that if this quarry is established, it would cause adverse impacts; therefore, the proposed quarry should not be allowed. He concluded his speech accordingly.

**14. Mr. Saravanan, Gopalapuram Village**

Mr. Saravanan stated that they have no objection to the establishment of this quarry.

**15. Mr. Ramaraj, Muththanathi Village**

Mr. Ramaraj stated that he expresses his support for this quarry.

**16. Name Not Mentioned**

He stated that the land near the proposed quarry site had been sold to the quarry owners earlier, but now the same people are objecting to the establishment of the quarry. He further mentioned that because of such quarries the road facilities have been developed in Gopalapuram village.

**17. Mrs. Lakshmi, Gopalapuram Village**

Mrs. Lakshmi stated that the quarry would not cause any adverse impact on their village. She further mentioned that the quarry owners had contributed Rs. 5 lakhs to construct a school and that they also provide necessary raw materials for house construction. She expressed her support for the establishment of this quarry.

**18. Mr. Gunasekaran, Gopalapuram Village**

Mr. Gunasekaran stated that he is a driver and that his friends are working as drivers in this quarry and that the quarrying operation provide employment opportunities for them. He concluded his speech by stating that he has no objection to this quarry.

**19. Mr. Ponnudurai, Gopalapuram Village**

Mr. Ponnudurai stated that the quarry is located at a distance of 500 feet from his house and there are 3,000 number of saplings have been planted and maintained around the quarry site. Therefore, he requested that permission be granted for this quarry.

**20. Mr. Ponnudurai, Gopalapuram North Street**

Mr. Ponnudurai stated that this quarry should be established for their livelihood.

**21. Mr. Muthukumaran, Sivalingapuram Village**

Mr. Muthukumaran stated that the establishment of this quarry would provide employment opportunities to the people of Vadakarai and Sivalingapuram villages. Therefore, he expressed that he has no objection to the establishment of this quarry.

**22. Mr. Manikandan, Gopalapuram Village**

Mr. Manikandan stated that the establishment of this quarry would not cause any adverse impact on the residents of Gopalapuram village. He further mentioned that he is a graduate and such quarries can provide employment opportunities to the local people. He expressed his support for the project.

After that, since no one came forward to give view on the project, the Revenue Divisional Officer, Sattur invited the public to offer their furthermore views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted and informed that the Minutes of the Meeting along with Compact Disc consisting the

entire videographed Public Hearing will be forwarded to the SEIAA for further actions. He also thanked all and requested to furnish their views if any in written of petitions.

| | | |
|---|---|---|
| Total number of written petitions received | - | 47 |
| Total number of petitions received from General Tapal | - | 01 |
| Total number of petitions | - | 48 |

With this, the meeting came to the end.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar.

Revenue Divisional Officer,
Sattur,
Virudhunagar District.

**Enclosures:**

1. Copy of Attendance Register (Total 9 – pages, 110 persons).
2. Videograph of public hearing meeting (CD format).
3. Copy of Public Notices (Both Tamil & English).

**விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், கோபாலபுரம் கிராமம், புல எண். 623/1C, 623/1D, 623/1G, 623/2A, 623/2B, 623/2C, 623/1A, 623/1B, 623/1E & 623/1F - ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.B.கபில்தேவ் உடைகல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக 09.12.2025 முற்பகல் 11.00 மணியளவில் தி/ள். பெரியதாய் கந்தசாமி கல்யாண மண்டபம், 3/367-ஏ, மணவாளன் தோட்டம், ஆலங்குளம் கிராமம், இராஜபாளையம் வழி, வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.சு.க.கனகராஜ் | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>சாத்தூர்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 2 | பொறி.ஜே.ஹேமந்த் ஜோசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 3 | திருமதி.ந.கலைவாணி | : | வட்டாட்சியர்,<br>வெம்பக்கோட்டை |
| 4 | பொறி.வே.கலைஜோதி | : | உதவிப் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| | வருகை பதிவேட்டின் படி | : | அரசு அலுவலர்கள், பொதுமக்கள், மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 110 நபர்கள்.<br>(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது). |

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், கோபாலபுரம் கிராமம், புல எண். 623/1C, 623/1D, 623/1G, 623/2A, 623/2B, 623/2C, 623/1A, 623/1B, 623/1E & 623/1F-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.B.கபில்தேவ் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துகேட்புக் கூட்டம் தி/ள். பெரியதாய் கந்தசாமி கல்யாண மண்டபம், 3/367-ஏ, மணவாளன் தோட்டம், ஆலங்குளம் கிராமம், இராஜபாளையம் வழி, வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் 09.12.2025 முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்றது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர், ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினமலர்"

மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆகிய நாளிதழ்களில் 06.11.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக் காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம், நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கேட்டுக் கொண்டார். எழுத்துப்பூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் எனவும் தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்துகேட்புக் கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு மேற்படி குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து பரிசீலிக்கும் பொருட்டு அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிறகு, வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள் பொதுமக்கள் கருத்துகேட்புக் கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக் கொண்டு, அதன் பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன் பின் தி/ள்.B.கபில்தேவ் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய் மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1.திரு.முத்துக்குமார், கோபாலபுரம் கிராமம்

திரு.முத்துக்குமார் அவர்கள், இக்குவாரி அமையவிற்கும் இடத்திலிருந்து மேற்கு பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் ஏற்கனவே குவாரிகள் இயங்கி கொண்டிருக்கிறது ஆகவே அவ்விடத்தில் மீண்டும் ஒரு குவாரி அமைந்தால் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் எனவும் மற்றும் டிராக்டர் மற்றும் லாரிகள் வைத்திருக்கக் கூடிய உரிமையாளர்களுக்கு இந்த குவாரிகளின் இயக்கத்தினால் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் எனவும், மேலும் வீடு கட்டுவதற்கு குறைந்த விலையில் கல் மற்றும் கிராவல் போன்றவை கிடைக்கும் என்று கூறினார். மேலும், இந்த குவாரி அமைவதினால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றுக் கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

2. திரு.வனராஜ், கோபாலபுரம் கிராமம்

திரு.வனராஜ் அவர்கள், இக்குவாரி அமைவதினால் எங்கள் வாழ்வாதாரத்திற்கு பயனுள்ளதாக இருக்கும் ஆகவே, இக்குவாரி அமைய வேண்டும் எனக் கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

3. திரு.ஜீவராஜ், முத்தாநதி கிராமம்

திரு.ஜீவராஜ் அவர்கள், இக்குவாரி அமைவதினால் எவ்வித பாதிப்பும் இல்லை எனவும், கல் மற்றும் மண் போன்றவை குறைந்த விலையில் கிடைக்கும் எனவும் கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

4.திரு.அய்யனார், வடகரை கிராமம்

திரு.அய்யனார் அவர்கள், இக்குவாரி அமைவதினால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. மேலும், இந்த குவாரி அமைந்தால் வேலை வாய்ப்பு கிடைக்கும் மற்றும் ஜல்லி, கல் மற்றும் மண் போன்றவை குறைந்த விலையில் கிடைக்கும் எனக் கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

5.திரு.M.சுந்தரராஜ், கோபாலபுரம் கிராமம்

திரு.M.சுந்தரராஜ் அவர்கள், இக்குவாரி அமைவதினால் எங்கள் கிராமத்திற்கு வருமானம் அதிகமாக கிடைக்கும், அந்த வருமானத்தைக் கொண்டு கிராமத்திற்கு

தேவையான வசதிகளை செய்து கொள்ள உதவியாக இருக்கும் ஆகையால் இக்குவாரி அமைவதால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறி தனது உரையை முடித்துக்கொண்டார்.

**6.திரு.S.ராஜ்குமார், கோபாலபுரம் கிராமம்**

திரு.S.ராஜ்குமார் அவர்கள், இக்குவாரி அமைந்திருக்கும் இடத்திலிருந்து 50 மீட்டர் இடைவெளியில் அவரது நிலம் அமைந்திருப்பதாகவும், மேலும் கிராமத்திலுள்ள சாலைகள் பழுதடைந்துள்ளதாகவும், இக்கருத்துக்கேட்புக் கூட்டம் கோபாலபுரம் கிராமத்தில் நடத்தப்பட வேண்டும் எனவும், மேலும், கோபாலபுரத்தில் அமைந்துள்ள குவாரிகள் அனைத்தும் முறையாக செயல்படுகிறதா என அதிகாரிகள் நேரில் வந்து பார்வையிட வேண்டும் எனக் கூறினார்.

**7.திரு.M.ஜெயக்குமார், கோபாலபுரம் கிராமம்**

திரு.M.ஜெயக்குமார் அவர்கள், இக்குவாரி அமைவதனால் எந்த பிரச்சனையும் இல்லை என்றும், 2021 - 2025 வரையுள்ள கனிமவள நிதியிலிருந்து ரூபாய் 5 கோடிக்கு கோபாலபுர ஊராட்சி மன்றத்தினை கட்டி கொடுத்ததாகவும், 2023 - 2024 ஆண்டிற்கான கனிமவள நிதியிலிருந்து ரூபாய் 89 லட்சத்திற்கு இரண்டு பாலங்கள் மற்றும் தார் சாலைகள் அமைத்துக் கொடுத்ததாகவும் கூறினார். மேலும், இக்குவாரி அமைவதினால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை எனக் கூறி தனது உரையை முடித்துக்கொண்டார்.

**8.திரு.K.பாரதிராஜ், சிவலிங்கபுரம் கிராமம்**

திரு.K.பாரதிராஜ் அவர்கள், சிவலிங்கபுர கிராமத்திற்கும் இந்த குவாரி அமையவிருக்கும் இடத்திற்கும் நான்கு கிலோமீட்டர் தூரம் உள்ளது என்றும், மேலும், கோபாலபுரத்திலிருந்து சுவாமிநாதபுரம் செல்லும் சாலையின் மக்கள் பயன்பாடு 10 சதவீதம் தான், ஆனால் கல்குவாரிகளுக்கு 90 சதவீதம் பயன்படுவதாகவும், மேலும், இக்குவாரி அமைவதினால் ஆட்சேபனை இல்லை என்று கூறி தனது உரையை முடித்துக்கொண்டார்.

**9.திரு.R.கிருஷ்ணமூர்த்தி, கோபாலபுரம் கிராமம்**

திரு.R.கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இக்குவாரியிலிருந்து 500 மீட்டர் தொலைவில் அவரது வீடு அமைந்திருப்பதால், குவாரியில் வெடி வைக்கும்போது அவரது வீட்டில் அதிர்வு ஏற்படுகிறது எனவும், ரூபாய் 85 லட்சத்திற்கு அமைக்கப்பட்ட சாலை இந்த குவாரியின் பயன்பாட்டிற்கு தான் என்றும், மக்களின் பயன்பாட்டிற்கு அல்ல என்றும் கூறினார். மேலும், இக்கிராமத்தில் அமைந்துள்ள நான்கு குவாரிகளும் ஒரே நேரத்தில் வெடி வைப்பதினால் அதிக சத்தம், அதிக புகை மற்றும் துர்நாற்றம் ஏற்படுவதாகவும் கூறினார். மேலும், கால்நடை மேய்ப்பவர்கள் மற்றும் விவசாயம் செய்பவர்களுக்கு எந்த நேரத்தில் வெடி வைக்கின்றனர் என முன்னறிவிப்பு செய்யவில்லை என்று கூறி தனது உரையை முடித்துக்கொண்டார்.

**10.திரு.செந்தில்குமார், கோபாலபுரம் கிராமம்**

திரு.செந்தில்குமார் அவர்கள், இக்கருத்துக்கேட்புக் கூட்டமானது கோபாலபுரத்தில் நடத்தியிருக்க வேண்டும் எனவும், இனிவரும் காலங்களில் எங்களது கோபாலபுரம் கிராமத்தில் கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டு தனது உரையை முடித்துக்கொண்டார்.

**11.திரு.மணிகண்டன், கோபாலபுரம் கிராமம்**

திரு.மணிகண்டன் அவர்கள், இக்குவாரி அமைவதினால் எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றும், கடந்த ஐந்து ஆண்டுகளாக காலமாக எங்களது கிராமத்தில் குவாரிகள் இயங்கி கொண்டிருக்கிறது எனவும், அதனால் எந்த பாதிப்பும் இல்லை எனக் கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**12.திரு.கண்ணாயிரம்,கோபாலபுரம் கிராமம்,**

திரு.கண்ணாயிரம் அவர்கள், இந்த குவாரி அமையும் இடத்திலிருந்து 300 மீட்டர் - 400 மீட்டர் தொலைவில் வீடுகள் அமைந்திருப்பதாகவும், மேலும் குவாரியில், தொடர்ந்து வெடி வைப்பதினால் வீடுகள் பாதிப்படையும் எனக் கூறி தனது உரையை முடித்துக்கொண்டார்.

13.திரு.வேணுகோபால், கோபாலபுரம் கிராமம்

திரு.வேணுகோபால் அவர்கள், இக்குவாரி அமைந்தால் பாதிப்பு ஏற்படும் ஆகையால் இக்குவாரி வேண்டாம் எனக் கூறி தனது உரையை முடித்துக்கொண்டார்.

14.திரு.சரவணன், கோபாலபுரம் கிராமம்

திரு.சரவணன் அவர்கள், இக்குவாரி அமைவதினால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை எனக் கூறினார்.

15.திரு.ராமராஜ், முத்தாநதி கிராமம்

திரு.ராமராஜ் அவர்கள், இக்குவாரிக்கு ஆதரவு தெரிவிப்பதாக கூறினார்.

16.பெயர் குறிப்பிடப்படவில்லை

இக்குவாரிக்கு அருகில் அமைந்துள்ள நிலத்தை குவாரி உரிமையாளர்களுக்கு விற்பனை செய்துவிட்டு, தற்பொழுது அவ்விடத்தில் குவாரி அமையக் கூடாது என்று கூறுகின்றனர். மேலும், இது போன்ற குவாரிகளால் தான் கோபாலபுரத்தில் சாலை வசதிகள் செய்து தரப்பட்டிருக்கிறது என்றும் கூறி தனது உரையை முடித்துக்கொண்டார்.

17.திருமதி.லட்சுமி, கோபாலபுரம் கிராமம்

திருமதி. லட்சுமி அவர்கள், இக்குவாரியினால் எங்கள் கிராமத்திற்கு எவ்வித பாதிப்பும் இல்லை எனவும், இந்த குவாரிகளின் உரிமையாளர்கள் ரூபாய் 5 இலட்சம் கொடுத்து பள்ளிக்கூடம் கட்டுவதற்கு உதவியதாகவும் மற்றும் வீடு கட்டுவதற்கு தேவையான மூலப்பொருட்களை வழங்குவதாகவும் கூறி இக்குவாரிக்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

18.திரு.குணசேகரன், கோபாலபுரம் கிராமம்

திரு.குணசேகரன் அவர்கள், தான் பேருந்து ஓட்டுநனர் எனவும், எனது நண்பர்கள் இக்குவாரியில் தான் ஓட்டுநராக பணிபுரிகின்றனர் எனவும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தருகின்றனர் எனவும், இக்குவாரிக்கு ஆட்சேபனை இல்லை எனக் கூறி தனது உரையை முடித்துக்கொண்டார்.

19.திரு.பொன்னுத்துரை, கோபாலபுரம் கிராமம்

திரு.பொன்னுத்துரை அவர்கள், என்னுடைய வீட்டிலிருந்து 500 அடி தொலைவில் குவாரி அமைந்திருப்பதாகவும், குவாரியைச் சுற்றி 3000 மரக்கன்றுகள் வைத்து பராமரிப்பதாகவும், ஆகையால் இக்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

20.திரு.பொன்னுத்துரை, கோபாலபுரம் வடக்குத் தெரு

திரு.பொன்னுத்துரை அவர்கள், இக்குவாரி எங்களுக்கு அமைய வேண்டும் எனக் கூறினார்.

21.திருமுத்துக்குமார், சிவலிங்கபுரம் கிராமம்

திரு.முத்துக்குமார் அவர்கள், இக்குவாரி அமைவதினால் வடகரை மற்றும் சிவலிங்கபுரம் கிராமத்தில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் ஆகவே இக்குவாரி அமைவதற்கு எவ்வித ஆட்சேபனை இல்லை எனக் கூறினார்.

22.திரு.மணிகண்டன், கோபாலபுரம் கிராமம்

திரு.மணிகண்டன் அவர்கள், இக்குவாரி அமைவதினால் கோபாலபுரம் கிராம மக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை எனவும், தான் ஒரு பட்டதாரி, இது போன்ற குவாரி அமைந்தால்தான், குவாரியைச் சுற்றியுள்ள ஊர் பொதுமக்கள் மற்றும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் எனவும் கூறி இத்திட்டத்தினை வரவேற்றார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக்கூற வேறுயாரும் முன்வராததால், வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும், கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ அடங்கிய குறுந்தகடு மற்றும் எழுத்துபூர்வமான கூட்ட நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு பரிசீலினை செய்யும் பொருட்டு

அனுப்பிவைக்கப்படும் எனவும், மற்றும் எழுத்துப் பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

| | | |
|---|---|---|
| எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 47 |
| இவ்வலுவலகத்தில் தபால் மூலம் பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | - | 01 |
| மொத்த மனுக்களின் எண்ணிக்கை | - | 48 |

அத்துடன்பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நிறைவுபெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர் மாவட்டம்.

வருவாய் கோட்டாட்சியர்,
சாத்தூர்,
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. வருகைப் பதிவேடு நகல் (மொத்தம் - 9 பக்கங்கள்,110 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்புக் கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).